மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்பது சபையில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிய விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால், அவைபற்றி இருக்கவேண்டும். நீங்கள் எதையொட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறீர்கள் என்று சொல்லுங்கள்.

DR. H. V. HANDE: In this particular context the hon. Member Thiru Krishnamurthy gave a notice of no-confidence motion against the Deputy Speaker in the morning ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நாம் வகுத்துக் கொண்டிருக்கிற விதிமுறைகள் மீறப்படுகிற நேரத்தில், நாம் சட்ட மன்றத்தில் கடைபிடித்து வருகிற மரபுகள் மீறப்படுகிற நேரத்தில் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம். வெளியில் நடக்கிற நிகழ்ச்சிகளையொட்டி பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது.

DR. H. V. HANDE: It is a very valid point. You can also ask Mr. Krishnamurthy. About a couple of hours later he withdrew the motion on the specific understanding that this will be de-expunged. If this is going to be the practice—that if a member who gives a no-confidence motion is given an assurance like this, it is a very, very serious matter. Every one of us. . .

இதுபோல ஒரு தீர்மானத்தைக் கொடுத்து சபாநாயகரை மிரட்டலாம். நமது சட்ட மன்ற நிகழ்ச்சிகள் எப்படி நடைபெற வேண்டும் என்பதற்கு விதிமுறைகளே இருக்கின்றன. இந்த ரூல்ஸ் புத்தகத்தில் எந்தவிதியின் கீழும் டீ-எக்ஸ்பன்ஜ் பண்ண வாய்ப்பே கிடையாது. ஆளுங்கட்சிக்காரர் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொடுத்துவிட்டார், அவர் அதை வாபஸ் பெறும்படி இதுபோல டீ-எக்ஸ்பன்ஜ் பண்ணுவதாக நெகோஷியேஷன் மூலம் செய்வது பின்னால் மிகப் பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும்.

Under what Rule you are de–exponging an expunged matter? I want the number of the rule.

திரு. ஆலடி அருணா: மாண்புமிகு திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவையில் பேசியதை துணைச் சபாநாயகர் அவர்கள் அவைக் குறிப்பில் இருந்து நீக்கினார். அவர் நீக்கியது தவறு என்று —அதை நீக்கியதற்கு ஐந்தாறு தினங்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் அவற்றை சபை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றுகிறீர்கள்.

இப்படி ஏற்ற வேண்டிய அவசியம் என் ஏற்பட்டது? அன்றைக்கே உடனடியாக எடுத்துச் சொல்லாததற்கு காரணம் என்ன. ஆளுங்கட்சி உறுப்பினருடைய மிரட்டலுக்குப் பயந்து—அவர் கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்குப் பணிந்து—இதுபோல செய்யப்படுகிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. இதை அவைக்குறிப்பில் ஏற்ற சம்மதித்தால்தான் தாம் கொடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை திரும்ப பெற்றுக் கொள்ள முடியும் என்று உங்களை நிர்பந்தப்படுத்தினாரா? அவர் அந்தத் தீர்மானத்தை திரும்பப் பெற்றதே—இதுபோல சபை நடவடிக்கைக் குறிப்பில் அவர் பேசியது ஏற்றப்படும் என்கிற உறுதி அளிக்கப்பட்டதால்தான்—ஆளுங்கட்சி நிர்பந்தம் காரணமாகத்தான் இந்த நிலை ஏற்பட்டிருக்கிறது என்பது எங்களுக்குக் கிடைத்த தகவல். தாம் தவறாக முறைகேடாக அன்றைக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி பேச்சை அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கியதற்கு துணைச் சபாநாயகர் வருத்தம் தெரிவித்துக்கொண்டிருக்கிறாரா? அவர் ஒரு தவறு செய்திருக்கிறார் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எப்படி பாயின்ட் ஆப் டாக்டர் எச். வி. ஹாண்டே : விதி 235, 236.

டாக்டர் எச். வி. ஹாண்டே : விதி 235, 236.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைப் படியுங்களேன்.

Dr. H. V. HANDE : Rule 235 reads thus—

" If the Speaker is of opinion that a word or words has or have been used in debate which is or are defamatory or indecent or unparliamentary or undignified, or grossly irregular he may in his discretion, order that such word or words be expunged from the official report of the proceedings of the House, and all consequential alterations made in such report and make an announcement in the Assembly of the fact of his having made such order."

Rule 236 reads—

" The portion of the proceedings of the House so expunged shall be marked by asterisks and an explanatory foot-note shall be inserted in the proceedings as follows :—

" Expunged as ordered by the Chair."